**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No. 214/2019**

**24.03.2026**

**D.W.1 – காந்தி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்குரை சங்கதிகளை தெரிந்துகொண்டேன். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கொடிவழி ஜாபிதா பிராதில் சொல்லியுள்ள விவரம் சரிதான். தாவா 4 இலக்க சொத்துக்கள் ஆதியில் பெரியகருப்பதேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் பெரியகருப்பதேவரின் மூத்த மகன் அம்மாவாசி தேவரின் வாரிசு என்றால் சரிதான். வாதிகள் பெரியகருப்பதேவரின் மற்ற 2 மகன்கள் மொக்க தேவர் மற்றும் ராசுதேவர் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா வழக்கில் எதிர்வழக்குரைக்கு விவரம் சொன்னது நான் தான். பிராது சொத்துக்களில் 1/3 பாகம் உள்ளது என்றால் சரிதான். அதுபோன்று வாதிகளுக்கு 2/3 பாகம் உள்ளது என்றால் தாவா சொத்துக்களில் முதல் அயிட்ட சொத்தில் பாகம் இல்லை 2 முதல் 4 சொத்துக்களில் 2/3பாகம் உள்ளது. தாவா 2 முதல் 4 சொத்துக்களில் வாதிகளுக்கு 2/3 பாகம் கொடுக்க ஆட்சேபனை இல்லை . தாவா 1 இலக்க சொத்திற்கு பெரியகருப்பதேவர் என் தகப்பனால் அம்மாசிக்கு பாத்தியபடுத்தி எவ்வித ஆவணம் எழுதுக்ககொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவ 1வது இலக்க சொத்தை பொருத்து அம்மாவாசி ,ராசுதேவர், மொக்கதேவர் ஆகியோர்களுக்கு இடையில்

எவ்வித பதிவு பாத்தியம் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா 1வது இலக்க சொத்தை பொருத்து வாதிகளுக்கு 2/3 பாகம் கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு பங்கை கொடுக்காமல் இருப்பதற்காக 1 வது அயிட்ட சொத்தை பொருத்து தவறுதலாக எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.1 பட்டா மாறுதலின் போது வாதிகளை அழைத்து விசாரிக்க வில்லை என்றால் சரிதான். பி.வா.சா.1 முதல் 3 வரை ஆவணங்கள் தன்னிச்சையாக ஏற்பட்டது ஆகையால் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.24 17:35:36 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.